ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | கிறிஸ்தவம் – I | நேரம் : 3 மணி. |
|---|---|---|

- **சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1. மரியாளின் வாழ்க்கை முன்மாதிரியை மதிக்கும் நீர்,
   01. அபாயகரமான தீர்மானங்களை எடுக்கக்கூடாது.
   02. சமுதாயத்தின் நோக்கு எவ்வாறாயிருப்பினும் சரியானவற்றைச் செய்யவேண்டும்
   03. பிரச்சினைகளின் மத்தியில் கலங்கிட வேண்டும்.
   04. விஷேட செய்திகளை கேள்வியுறும்போது மகிழ்ச்சியடைய வேண்டும்.

2. 'நல்ல ஆயன்' மூலமாக நிறைவான தலைமைத்துவ குணாதிசயங்களைப் பின்பற்றும் நீர் குறிப்பாக,
   01. அர்ப்பணிப்புடன் கூடிய வாழ்வு வாழ்ந்திட வேண்டும்.
   02. கீழ்ப்படிவுடன் கூடிய வாழ்வு வாழ்ந்திட வேண்டும்.
   03. தியாக சிந்தனையுடனான பணி செய்தலில் ஈடுபடுதல் வேண்டும்.
   04. பொறுப்புடன் கூடிய வாழ்வு வாழ்ந்திட வேண்டும்.

3. கிறிஸ்தவ திருமுழுக்குப் பெற்றவர்கள்,
   01. பிற இனத்தவரிடமிருந்து பிரிந்திருக்க வேண்டும்.
   02. சமயச்சடங்கொன்றை நிறைவேற்றியதில் மகிழ்வுற வேண்டும்.
   03. ஆவியானவரின் செல்வாக்கின் அனுபவத்தை வாழ்வு முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும்.
   04. நீரினால் தூய்மைப்படுத்தலை மதிக்க வேண்டும்.

4. விரைவில் நாளைய உலகில் அடியெடுத்து வைக்க இருக்கும் நீங்கள், உங்களுக்கு ஏற்படும் சோதனைகளின் போது,
   01. வேதவசனங்களிலிருந்து வழிநடத்துதல் பெற்று, அவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டும்.
   02. மனசாட்சியை வினவ வேண்டும்.
   03. சோதனைகளை நியாயப்படுத்த வேண்டும்.
   04. இயேசுவுக்கு சோதனைகள் ஏற்பட்டது என்று எண்ணி மனதை தேற்றிக்கொள்ளவேண்டும்.

5. திருமுழுக்கு யோவானின் போதனைகளைப் பின்பற்றும் நீங்கள்,
   01. ஆண், பெண் வேறுபாடுகளைக் கண்டித்தல் வேண்டும்.
   02. சமுதாயத்தில் வயோதிபரைப் பற்றி விமர்சிக்க வேண்டும்.
   03. சீரான சமுதாய முன்னேற்றத்தில் பங்காளியாக வேண்டும்.
   04. இயேசுவின் இரண்டாம் வருகையினைப் பற்றி எச்சரிக்கை விடுபவராக இருக்கவேண்டும்.

6. சக்கரியாவின் தொழில்,
   01. மேய்ப்பன்   02. பராமரிப்பாளன்   03. குருத்துவப்பணி   04. காவலன்

7. இயேசுவிற்கு எத்தனையாம் நாள் அர்ப்பணிப்பு விழா இடம்பெற்றது?
   01. 20ஆம் நாள்   02. 40ஆம் நாள்   03. 30ஆம் நாள்   04. 8ஆம் நாள்

8. யோவான் என்ற பெயரின் கருத்து,
   01. இறைவாக்கினர்   02. அலைந்து திரிபவர்
   03. சிரிப்பவர்   04. இறைவனின் அருட்கொடை

9. வரி அறவிடுபவர்களுக்குத் தலைவராகச் செயற்பட்டவர்,
   01. யோவான்   02. பேதுரு   03. சகேயு   04. பவுல்

10. நல்ல பங்கைத் தெரிந்து கொண்டவள்,
   01. மார்த்தாள்   02. மரியாள்   03. ஸ்திரி   04. எஸ்தர்

11. புறவினத்தார் தேவாலயத்தில் செல்லக்கூடிய இடம்,
   01. உள்ளே   02. பலிபீடத்துக்கு   03. வெளிப்பகுதி   04. வாசல்

12. உரோமப் பேரரசில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிமதிப்பெழுதப்படும்?
   01. 13 வருடங்கள்   02. 14 வருடங்கள்   03. 10 வருடங்கள்   04. 8 வருடங்கள்

13. இயேசுவின் சீடத்துவத்துக்கு அழைக்கப்படும் ஒருவருக்கு இருக்கவேண்டிய முக்கிய குணாதிசயம்,
   01. பொறுமை   02. தைரியம்   03. தாழ்மை   04. தியாகம்

14. 'யோசுவா' என்ற பதத்திற்கான அர்த்தம் யாது?
   01. காப்பாற்றுவார்   02. கடவுள் நம்மை விடுவிப்பவர்
   03. கடவுள் ஒருவர்   04. வழிகாட்டி

15. இயேசுவின் 'பிறப்பு நற்செய்தி' முதன்முதலாக .................................... கொடுக்கப்பட்டது.
   01. ஏழைகளுக்கு   02. சிறுவர்களுக்கு   03. இராஜாக்களுக்கு   04. செல்வந்தர்களுக்கு

16. யூத சம்பிரதாயப்படி 'திருமுழுக்கு' என்பதன் கருத்து யாது?
   01. மதம் மாறுதல்   02. சுத்தப்படுதல்
   03. கட்டாயச் செயல்   04. பிற இனத்தாரின் செயல்

17. சோதனையிலும், போராட்டத்திலும் இயேசு வெற்றிகொள்ள எதனைப் பயன்படுத்தினார்?
   01. தூதர்களின் உதவியை   02. கடவுளின் உதவியை
   03. புத்தியை   04. திருமறையை

18. இயேசு நாசரேத்து தொழுகை கூடத்தில் வாசித்த திருமறைப்பகுதி எது?
   01. எரேமியா   02. ஏசாயா   03. யாக்கோபு   04. யோவான்

19. 'அப்போஸ்தலர்' என்பதன் கிரேக்க சொல்,

01. தெரிந்துகொள்ளப்பட்டவர் 02. அழைக்கப்பட்டவர்
03. பிரிக்கப்பட்டவர் 04. அனுப்பப்பட்டவர்

20. பேதுரு இயேசுவை யாரென அறிக்கையிட்டார்?

01. கடவுளின் மேசியா 02. இறைமைந்தர் 03. அருட்பொழிவு பெற்றவர் 04. தேவகுமாரன்

21. சுங்கச்சாவடியில் வைத்து இயேசுவினால் அழைக்கப்பட்டவர்,

01. மாற்கு 02. லூக்கா 03. மத்தேயு 04. யோவான்

22. இயேசுவின் காலத்தில் அதிகமான மக்கள் அறிந்திருந்த மொழி எது?

01. கிரேக்கம் 02. எபிரேயம் 03. இலத்தின் 04. அரமேயு

23. இயேசு அழைத்த முதல் சீடன்,

01. அந்திரேயா 02. யோவான் 03. பேதுரு 04. யாக்கோபு

24. இயேசுவின் பணி எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

01. எருசலேம் 02. யூதா 03. கலிலேயா 04. நாசரேத்து

25. நற்செய்தி நூல்கள் எத்தனை?

01. 5 02. 4 03. 2 04. 6

26. "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது" என்று கூறியவர்,

01. அன்னாள் 02. மரியாள் 03. எலிசபெத்து 04. சூசன்னாள்

27. ஆண்டவராகிய இயேசுவை தன் கரங்களில் ஏந்தி, "உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது." எனக் கூறிய தீர்க்கதரிசி யார்?

01. சிமியோன் 02. சகரியா 03. யோசேப்பு 04. மல்கியா

28. "நீ கர்த்தருடைய ராஜாவா?" என்று கேட்டதற்கு, ஆண்டவர் இயேசு "நீ சொல்கிறபடிதான்." என்று யாருக்கு உத்தரவு கூறினார்?

01. அன்னா 02. காய்ப்பா 03. ஏரோது 04. பிலாத்து

29. ஏழை லாசரு மரித்த பின்பு, தேவதூதரால் கொண்டு போய் விடப்பட்ட இடம் எது?

01. நோவாவின் மடி 02. ஆபிரகாமின் மடி 03. சாமுவேலின் மடி 04. யோபுவின் மடி

30. யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக பதினொரு அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணி சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டவன்,

01. பர்னபா 02. சீலா 03. மத்தியா 04. தீமோத்தேயு

31. பெந்தகோஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய,

01. 3000 பேர் 02. 5000 பேர் 03. 3500 பேர் 04. 6000 பேர்

32. தேவாலயத்தில் அலங்கார வாசலண்டையில் தினமும் பிச்சையெடுத்து பேதுரு யோவான் மூலமாய் இயேசுவின் நாமத்தினாலே சுகமடைந்தவன்,

01. பார்வையிழந்தவன் 02. சூம்பினகையுடையவன் 03. குஸ்டரோகி 04. சப்பாணி

33. யாருடைய வீட்டில் வைத்து ஆண்டவராகிய இயேசு வேதபாரகரையும், பரிசேயரையும் பார்த்து "நீதிமான்களையல்ல... பாவிகளையே மனம் திரும்புவதற்கு அழைக்க வந்தேன்..." என்றார்?

01. சீமோன் 02. யோசியா 03. சகேயு 04. யோசே

34. நாசரேத்து பிரகடனத்தின்படி கிறிஸ்தவப் பணியின் முக்கிய நோக்கங்களாவன,

அ). இறைவாக்குரைத்தலாகும்

ஆ). அற்புதங்கள் செய்வதாகும்.

இ). அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதாகும்.

ஈ). திருமறையை வாசிப்பதாகும்.

சரியான விடைகளாவன,

01. அ, ஆ 02. ஆ, இ 03. அ, இ 04. இ, ஈ

35. "நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவர்..."

01. என்னைப் பின்பற்றி அக்கினியினால் திருமுழுக்கு கொடுப்பார்.

02. தண்ணீரிலும், ஆவியினாலும் அபிஷேகம் செய்வார்.

03. தூய ஆவியினாலும், அக்கினியினாலும் திருமுழுக்கு கொடுப்பார்.

04. என்னைப் போலன்றி இறைவார்த்தையினால் போசிப்பார்.

36. கிறிஸ்தவ சீடத்துவம் கருத்துள்ளதாய் அமைவதற்கு,

01. பிறருக்கான பணியில் எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

02. நற்செயல்கள் அத்தியாவசியமாகும்.

03. நவீன தொழில்நுட்பம் அத்தியாவசியமாகும்.

04. மனிதநேயம் அவசியமாகும்.

37. மன்னித்தல் தொடர்பில் கிறிஸ்தவர்களுக்கு இயேசு தரும் அறைகூவல்,

A. – நிபந்தனையின்றி மன்னித்தல்.

B. – குற்றம் இழைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் மன்னித்தல்.

C. – பிழையைச் சுட்டிக்காட்டி மன்னித்தல்.

D. – குற்றத்தின் தன்மையைப் பொறுத்து மன்னித்தல்.

மிகக் கிட்டிய விடை,

01. A, B 02. B, C 03. C, D 04. A, D

38. பவுலைப்போன்று எமது வாழ்வும் முற்றிலும் மாற்றம் அடைவதற்கு நாம் செய்யவேண்டியது,
   01. தைரியமாக செயல்புரிய வேண்டும்.
   02. ஒரு தரிசனம் பெறும் வரை காத்திருத்தல் வேண்டும்.
   03. இறைவனுடன் தனிப்பட்ட உறவுக்குள் பிரவேசிக்க வேண்டும்.
   04. பிறரின் செல்வாக்கைப் பெறவேண்டும்.

39. சமுதாயத்தில் கிறிஸ்தவனின் பொறுப்பு,
   01. இறையரசின் விழுமியங்களின்படி சமுதாயத்தை மாற்றியமைத்தலாகும்.
   02. பிறருடன் சேர்ந்து புதிய சமுதாய அமைப்பைக் கொண்டு வருதலாகும்.
   03. சமுதாயத்தில் கிறிஸ்தவ அடையாளத்திற்கு முதலிடம் கொடுத்தலாகும்.
   04. சமுதாய சீர்திருத்தவாதிகளின் கடமைகளை நினைவுபடுத்தலாகும்.

40. இயேசு கற்பித்த இறையரசு பற்றிய முக்கிய கொள்கைகளைப் பின்பற்றும் நீர்,
   01. எப்போதாவது காணாமற்போனவர்களைத் தேடவேண்டும்.
   02. தனிப்பட்ட மற்றும் உலக ரீதியான தேவைகள் யாவற்றையும் முற்றாக விட்டுவிட வேண்டும்.
   03. இறைவனின் எல்லையற்ற அன்பை வார்த்தையிலும் செயலிலும் காட்டவேண்டும்.
   04. எமது சொந்த முயற்சியினால் இறையரசு வளர்கின்றது என்று காட்டவேண்டும்.

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | கிறிஸ்தவம் – II | |
|---|---|---|

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும், ஏனைய ஒவ்வொரு வினாவின் சரியான விடைகளுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. **சுருக்கமான விடைகள் எழுதுக.**

i. "**காரிருளில்** நடந்து வந்த மக்கள் **பேரொளியைக்** கண்டார்கள்." - இங்கு தடித்த எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சொற்களும் எவற்றைக் குறிப்பிடுகின்றன?

ii. திருமுழுக்கு யோவானின் வாழ்விலிருந்து நாம் பின்பற்றக் கூடிய இரண்டு குணாதிசயங்களான தாழ்மையும், தைரியமும் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தை முன்வைக்க.

iii. மெசியா பற்றிய கொள்கையுடன் தொடர்புள்ள இரண்டு சிறப்பம்சங்களை எழுதுக.

iv. நாசரேத்து தொழுகைக்கூடத்தில் இயேசுவானவர் கூறிய இரண்டு முதுமொழிகள் யாவை?

v. சதுசேயர் இயேசுவிடம் வினவிய இரண்டு வினாக்களையும் எழுதுக.

vi. பவுல் திருப்பணியில் ஈடுபடும்போது கைக்கொண்ட சமயோசித செயல்கள் இரண்டினை உதாரணங்களுடன் தருக.

vii. சமுதாய நீதியை முக்கியப்படுத்திய ஓர் இறைவாக்கினரின் பெயரையும், கடவுளின் பரிசுத்தத்தைப் பற்றிக் கூறிய ஓர் இறைவாக்கினரின் பெயரையும் முறையே குறிப்பிடுக.

viii. "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவது ஏன்?"

அ). இவ்வார்த்தைகளை வானதூதர் யாருக்குக் கூறினார்?

ஆ). இவ்வார்த்தைகள் இன்று எமக்கு தரும் செய்தி என்ன?

ix. அ). இயேசுவானவர் நிறைவு செய்த புதிய உடன்படிக்கை என்ன?

ஆ). இவ்வுடன்படிக்கையை எப்போது ஏற்படுத்தினார்?

x. பத்து கட்டளைகளில் வாக்குத்தத்தத்துடன் கூடிய ஓர் கற்பனை எத்தனையாவது கற்பனையாகக் காணப்படுகிறது?

(10x2=20 புள்ளிகள்)

02. i. இறையரசின் வளர்ச்சியைப் பற்றி இயேசு கூறிய இரண்டு உவமைகளின் தலைப்புகளை எழுதுக.

ii. அவற்றில் ஒன்றை விரிவாக எழுதுக.

iii. பன்மைச் சமுதாயத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவன் இறையரசின் விழுமியங்கள் வளர்ச்சியுறுவதற்கு எவ்வாறு செயல்பட வேண்டும்?

(2+5+3=10 புள்ளிகள்)

03. i. எமது சூழ்நிலைக்கு ஏற்ப நாம் எவ்வாறு எமது கிறிஸ்தவ பண்புகளைக் காட்டமுடியும்? அவற்றை விளக்குக.
 ii. யூத சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறு காணப்பட்டது?
 iii. இன்றைய சமுதாயத்தில் சிறுவர்களின் நிலை எவ்வாறு காணப்படுகிறது?

(5+3+2=10 புள்ளிகள்)

04. i. புனித பவுலின் இரண்டாம் பயணத்தில் பிலிப்பியில் நடந்த முக்கிய சம்பவங்களைத் தருக.
 ii. பவுலுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவை?
 iii. பவுலிடம் காணப்பட்ட தலைமைத்துவப் பண்புகளைக் கருத்தில் கொண்டு இன்றைய சூழலில் உம்மால் ஆற்றக்கூடிய பணிகள் ஐந்து தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. i. ஆதித் திருச்சபை என்னும் ஆரம்பகாலத் திருச்சபையின் நான்கு முக்கிய சிறப்பியல்புகள் யாவை?
 ii. இயேசுவானவரின் பிறப்பு எளிமையான சூழலில் நடந்தது என்பதற்கான இரு குறிப்புகளைத் தருக.
 iii. இன்று இலங்கையிலுள்ள பிரிவினைகளைக் குறிப்பிடுக. சமாதானத்துடனான சகவாழ்வை ஊக்குவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் நடைமுறையில் கைகொள்ளக்கூடிய வழிகள் எவை?

(3+2+5=10 புள்ளிகள்)

06. i. "நீரும் போய் அப்படியே செய்யும்." - இயேசுவானவர் இதனை யாருக்கு கூறினார்?
 ii. இதனை எந்த நிகழ்வின் பின்னணியில் கூறினார்?
 iii. அவர்கள் இதனை விளக்குவதற்கு இயேசுவானவர் கூறிய உவமையில் வரும் மூன்று கதாபாத்திரங்களும் யாவை?

(2+5+3=10 புள்ளிகள்)

07. சிறு குறிப்பெழுதுக.
 i. பவுல்
 ii. பேதுரு
 iii. திருமுழுக்கு

(3+3+4=10 புள்ளிகள்)


LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
G.C.E. O/L
විද්‍යාව
A9+
G.C.E. O/L PAST PAPERS
A+ GUIDE PAST PAPERS
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
G.C.E. O/L
සිංහල
G.C.E. O/L SINHALA
General English
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440